AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 17

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும்
மே 1முதல் 15வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## அனுமன்மகிமை

- முக்திபெற என்ன வழி?
- முத்துக்குமாரசாமி சித்தர்
- திருப்பூவனம் சிவன் கோயில்
- மூலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



இந்து மதம் என்கிற சனாதன தர்மத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துமே அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது இந்து தர்மத்தில் இலைகளுக்குக் கூட ஆற்றல் உள்ளது என்பதை மேல் நாட்டு அறிஞர் ஒருவர் அறிவியல் பூர்வமாக நிரூபித்திருக்கிறார்.
குறிப்பாக துளசி இலைக்கு உள்ள ஆற்றல் ஏகாதசி நாளில் பல மடங்கு சக்தியைப் பெறுகிறது. வில்வ இலை சிவ ராத்திரி இரவில் அபரிமிதமான சக்தியுடன் விளங்குகிறது என்பதை அறிவியல் கருவிகளைக் கொண்டு ஆணித்தரமாக நிரூபித்துள்ளார். இவைகளின் இந்த ஆற்றல் மனிதனிடத்தில் பல நல்ல தாக்கங்களையும் ஏற்படுத்துவதாய் கண்டறியப்பட்டுள்ளது.

~ Dr. Baskaran Pillai

சத்வித்யா வாசகர்களாம் அன்பு ஆன்மிக அன்பர்களே! உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், என்றார் வள்ளுவர், அதனையே தெய்வவாக்காகக் கொண்டு நல்லதையே எண்ணுவோம் குறிப்பாக, இது கொரோனா காலம்! இந்த கொடிய வைரஸ் தன் கொடுங்கரங்களால் நம் உயிர்களை உருக்கிக் கொண்டிருக்கிறது.

தடுப்பூசி தட்டுப்பாடால் தவிப்பு ஒருபுறம்! ஆக்சிஜன் கிடைக்காமல் அவதிகள் மறுபுறம்! இது என்ன கொரோனா என்னும் வைரஸா? அல்லது நம் குலம்கெடுக்க வந்த இயற்கைப் பேரழிவா? என்கிற தடுமாற்றம் தகித்துக் கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில் நல்லதையே நினைப்போம், நமக்கு எந்த நோயும் இல்லை என எண்ணுவோம், இறையருளையும் துணைக்கு அழைப்போம்! எண்ணம் போல் வாழ்வு என்றார்கள்! அதனால், நோயே இல்லை என்றே எண்ணுவோம் முகக்கவசம், சமூக இடைவெளி போன்ற அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றுவோம்.



நமக்கு நோய் இல்லை என்ற எண்ணமே 50 சதவிகித சிகிச்சையாகும்! கொரோனாவை விரட்டும் எண்ணத்தை இறைவன் வழங்கட்டும்! எல்லோரும் இன்புற்றிருப்போம்.

(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# முத்துக்குமாரசாமி சித்தர்

இந்த சத்வித்யா இதழ்ல நாம பார்க்கப்போற சித்தர், முத்துக்குமாரசாமி சித்தர் எனப்படுபவர். இவரோட ஜீவசமாதி, திருப்பூர் மாவட்டம், அவினாசி தாலூரக்காவுல சேயூர் அப்படிங்கற இடத்துல அமைஞ்சிருக்கு.

சேயூர்ல இருந்து கோபி போற சாலையில ஊரை ஒட்டியே அமைஞ்சிருக்குது. இந்த சித்தரோட பிருந்தாவனம்! இந்த சித்தரப் பத்திய விஷயங்கள இப்ப பார்க்கலாம்.



இந்த முத்துக்குமாரசாமி சித்தர் யார்? இவருக்கும் இந்த சேயூருக்கும் என்ன தொடர்பு? இவர் செய்த சித்துக்கள் என்ன? இவருடைய சிறப்புகள் என்ன என்பதனை சற்றே விரிவாக பார்க்கலாம்.

பிரதான சாலையை ஒட்டினாற் போலவே அமைந்துள்ளது, முத்துக்குமாரசாமி சித்தர் பிருந்தாவனம் பிருந்தாவனம் என்னும் சொல்லுக்கு வலுசேர்க்கும் விதமாக, சுற்றிலும் வண்ண வண்ண மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்க, நடுவில் அமைந்திருக்கிறது இந்த ஜீவசமாதி! சித்தர் முத்துக்குமாரசாமி அவர்கள் பிறந்தது, கோவில் நகரம் என பெரும்புகழ் பெற்ற காஞ்சி மாநகரில்! காஞ்சிபுரத்தில் செங்குந்தர் மரபில் தோன்றிய நமது சித்தர், இளமைக் காலந்தொட்டே, காமாட்சி அம்மனின் மீதும் முருகப் பெருமானின் மீதும் அளவற்ற பக்தி கொண்டு, பற்பல ஆராதனைகளை செய்து வந்தார்.

இவரது குடும்பம், தங்கள் குலத்தொழிலான நெசவுத்தொழிலில் ஈடுப்பட்டு வந்தது. ஓரளவு நிறைவுடன் குடும்பம் இருந்த சூழலில். இளமைப் பருவத்தில் இருந்த முத்துக்குமாரசாமிக்கு, தகுந்த துணை தேடி கரம்பற்ற வைக்க எண்ணினர் குடும்பத்தினர்.

ஆனால், சுவாமிகளின் எண்ணவோட்டமும் சிந்தனையும் வேறுவழியில் பயணித்து! அதாவது, இளவயது முதலே இறை நாட்டம் கொண்டிருந்ததால் பல தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்யும் நாட்டம் கொண்டவராய் புனித தலங்களை நாடி சென்று கொண்டிருந்தார். இதனால் பெற்றோர்களின் எண்ணம் ஈடேறாமலே இருந்தது. இந்த நேரத்தில் தான் இவர்களது குடும்பத்திற்கு இறைவன் மாபெரும் சோதனை ஒன்றைக் கொடுத்தார்!

ஓரளவு நிறைவுடன் நடந்து கொண்டிருந்த நெசவுத் தொழில் நசிந்து, இனிமேல் காஞ்சிபுரத்தில் காலம் தள்ளுவதே கடினம் என்னும் நிலைமை ஏற்பட, தங்கள் மரபினர், நெசவுத்தொழிலை வளமுடன் செய்துவந்த ஈரோடு நகரத்திற்கு அருகில் உள்ள வெள்ளோடு என்னும் ஊருக்கு குடும்பத்தினர் குடி பெயர்ந்து வந்தனர்.

வெள்ளோட்டிலிருந்து சேயூருக்கு எப்படி வந்தார் சுவாமிகள்? அவர் இங்கு ஜீவசமாதி அடைந்தது எப்படி? என்பதை அறிய முனைந்தால்"

வெள்ளோட்டில் குடியேறிய பின்னரும் தொழிலில் நாட்டமின்றி, பல்வேறு தலங்களுக்கும் சென்று இறை தரிசனம் கண்டு, ஞானத் தேடலில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டார், நம் முத்துக்குமாரசாமி சித்தர்!

இப்படியே, பல தலங்களுக்கும் சென்று இறையருள் பெறுவதை வழக்கமாய்க் கொண்ட சுவாமிகள், சிறிது காலம் தவளகிரி என்னும் தலத்திற்கு சென்று, அங்கு வீற்றிருக்கும் முருகப் பெருமானை வணங்கியவர், அங்கேயே சில காலம் தங்கி விட்டார்! அப்போது தான் இவர் தனது சித்து வேலைகளை வெளிப்படுத்தத் தொடங்கினார்.

தவளகிரி முருகன் சன்னதியில் மெய் மறந்து அமர்ந்திருந்த சுவாமிகளை சாதாரண பரதேசி என எல்லோரும் நினைக்க, அவர்களுக்கு தனது சக்தியை வெளிப்படுத்தும் விதமாக, தனது மார்பைக் கிழித்து, அதிலிருந்து வழிந்த தன் ரத்தத்தை விளக்கில் சேமித்து, அதில் தீபமேற்றி, முருகனுக்கு ஆராதனை செய்து காட்டினார், சுவாமிகள்!

இதைப் பார்த்த மக்கள் யாவரும் பிரம்மித்து நின்றனர்! இவரது தவ வலிமையையும் சக்தியையும் புரிந்து, முத்துக்குமாரசாமி சித்தர் என போற்றிப் புகழ்ந்தனர். இதோடு நின்று விடாத சுவாமிகள், அந்த ஊரின் அருகிலே ஓடிக் கொண்டிருந்த ஓடையின் அருகிலே நின்று, அந்த தெளிந்த ஓடை நீரை ரத்தமாக மாற்றிக் காட்டினாராம். இவரது அருட்சக்தியைக் கண்டு மக்கள் வாயடைத்து வியப்புடன் நிற்க, மீண்டும் அந்த ரத்த ஓடையை தெளிந்த நீராய் மாற்றி ஓட வைத்துள்ளார்.

இதையெல்லாம் நேரில் கண்ட மக்கள் சித்தரின் ஆற்றலை உணர்ந்து, கண்கண்ட தெய்வம் இவர் என வணங்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த மாபெரும் மகானின் ஜீவசமாதியை பராமரித்து வருபவர், பட்டயக்காரர் சின்னசாமி! இவர் பல அரிய பொருட்களையும் அது தொடர்பான வரலாற்று செய்திகளையும் தெரியப்படுத்துவதாக தமது இல்லத்திற்கு அழைத்தார். அங்கே'..

சுவாமியின் சன்னதியைப் போலவே தெய்வீகம் நிறைந்த ஓர் அறை அதிலே ஒரு பெரிய பெட்டி! அதன் உள்ளே'..

முத்துக்குமாரசாமி சித்தர் வணங்கிய ஸ்படிக விநாயகர், ஸ்படிகலிங்கம், வலம்புரி சங்கு, கை கட்டாரி, குத்து வாள், நீண்ட வாள்கள்னு நிறைய பொருட்கள் இருந்தது!

கை வாள், கட்டாரி, நீண்ட வாள்கள் இவையெல்லாம், ஒரு சித்தருக்கு எதற்கு என்ற கேள்வி

எல்லோருக்குமே எழும்! இதற்கான விளக்கத்தை சின்னசாமி அவர்களே சொன்னார்.
"ஒரு சமயம்'. மைசூர் தேசத்தை சிக்க தேவராயர் என்னும் மன்னர் ஆண்டு வந்தாராம். அந்த தேசத்திற்கு உட்பட்ட ஒரு கிராமத்துக்கு அருகில் பெரிய காடு ஒன்று இருந்ததாம். காட்டுக்குள்ளிருந்து ஊருக்குள் வரும் வேங்கை ஒன்று கிராம மக்கள், ஆடு, மாடு என அனைவருக்கும் தொல்லை தந்ததாம்! உயிர்ப்பலி நீண்டு கொண்டே போனதாம்.


முத்துக்குமாரசாமி சன்னிதி

மன்னன் படைகளை அனுப்பியும் வேங்கையை பிடிக்க முடியவில்லை. வேறு எவரும் வேங்கைக்கு பயந்து காட்டுக்குள் செல்ல மிகவும் பயந்திருந்த சூழ்நிலையில்'.. விஷயத்தைக் கேள்விப்பட்ட நமது சித்தர் முத்துக்குமாரசாமி, காட்டிற்குள் தனி ஒரு மனிதனாக சென்று, வேங்கையைக் கொன்று, அந்த மக்களின் வேதனையை தீர்த்துள்ளார். அப்போது அவர் பயன்படுத்தியது தான் இந்த கட்டாரி, கைவாள் மற்றும் பெரிய வாள்கள் என்ற வரலாற்றினை சொன்னார்.

வேங்கையைக் கொன்ற சுவாமிகளின் தீரச் செயலை அறிந்த மைசூர் மன்னர், சுவாமிகளை கௌரவிக்க, மைசூர் அரண்மனைக்கு அழைக்க, சுவாமிகளும் அரண்மனைக்கு சென்றுள்ளார். அப்போது மன்னரின் முகத்தில் வருத்த ரேகைகள் ஓட, காரணம் கேட்டுள்ளார் சுவாமிகள்? அப்போது தான் மன்னருக்கு மகப்பேறு கிட்டாத செய்தி சுவாமிகளுக்குத் தெரியவந்துள்ளது உடனே நமது சித்தர் எலுமிச்சங்கனிகள் மற்றும் மஞ்சள் கிழங்கினை மந்திரித்து மகாராணியிடம் கொடுத்து, "அடுத்த ஆண்டு இந்த அரண்மனையில் ஆண் மகவு வந்துதிக்கும்" என ஆசி வழங்கியுள்ளார். மகிழ்ச்சியடைந்த மன்னன், பொற்காசுகள் அடங்கிய பை ஒன்றை சுவாமிகளுக்கு பரிசாக வழங்கினாராம்.

மைசூர் மன்னர் கொடுத்த வெகுமதியைப் பெற்றுக் கொண்ட கையோடு இந்த சேயூருக்கு வந்துள்ளார் சுவாமிகள்! இங்கே இந்த இடத்திலேயே தங்கி வருகின்ற மக்களுக்கு அருளாசி கொடுக்கத் தொடங்கினாராம்.

இப்போது ஜீவசமாதி அமைந்துள்ள இந்த இடத்தில் ஒரு பரண் அமைத்து, அதன் மீது ஏறி நின்று தான் ஜீவசமாதி அடையவிருப்பதாக சொல்லியுள்ளார்!
இவர் ஜீவசமாதி அடைந்த விதம் இதுவரை எந்த சித்தரும் செய்யாத வினோத முறை! ஆம்! தன் கையில் இருந்த கட்டாரியை தன் கழுத்தில் பாய்ச்சி, நவகண்டம் என்னும் முறைப்படி, தன் உடலை ஒன்பது துண்டுகளாக்கி, அதன் பின் ஜீவசமாதி அடைந்துள்ளார், மகான் முத்துக்குமாரசாமி சித்தர்! இந்த ஜீவசமாதியில் பௌர்ணமி தினத்தில் விளக்கேற்றி வேண்டுதலை வைத்தால் அந்த வேண்டுதல்

நிச்சயம் நிறைவேறுகிறது என மக்கள் அனைவரும் கொண்டாடுகின்றனர். இங்கு பூஜை நடைபெறும் நேரத்தில் ஒருவர் சுவாமிகளின் புகழை உரக்கச் சொல்ல, அனைவரும் அதனை ஆமோதிக்கும் வகையில் குரல் எழுப்புகின்றனர். இது புதுமையான வழிபாடாய் இங்கு நடைபெறுகிறது.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னால் இங்கு ஜீவசமாதி அடைந்த ஸ்வாமிகள், இன்றும் இங்கே பற்பல சித்து வேலைகளை செய்து மக்களின் குறைகளை போக்கிக் கொண்டிருக்கிறார்.
இங்கு வந்து வேண்டிக்கொண்ட பல எளியவர்களுக்கு திருமணம் நடந்துள்ளது. குழந்தை வரம் வேண்டி நின்று, அந்தப் பேறு கிடைக்கப் பெற்ற தம்பதியர் நன்றியோடு வந்து ஜீவசமாதியில் வணங்குகின்றனர்.

தங்கள் குறை இன்னதென்று இங்கு வந்து சுவாமிகளை மனமுருக வேண்டுவோர் அனைவருக்கும் குறைகள் தீருகின்றத்து சித்தர் முத்துக்குமாரஸ்வாமிகளின் திருவருள் பெற்று அனைவரும் நலம் பெறுவோம்.

~ ரா. பன்னீர்செல்வம்



உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com
போன்: 88702 88701

# திருப்பூவணம்

## ஸ்ரீ சவுந்தரநாயகி சமேத ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்

கூடல் மா நகர் மதுரைக்கு கிழக்கே பன்னிரெண்டு மைல் தொலைவில் வைகை நதிக் கரையில், மதுரையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் நெடுஞ்சாலை இவ்வூர் வழியே போகிறது. திருப்பூவணம் என்ற இரயில்வே ஸ்டேஷனில் இருந்து இத்தலம் அரைக்கல் தொலைவில் அமைந்து உள்ளது. மதுரை மண்ணில் தான் எத்தனை ஆலயங்கள் அப்பப்பா திரும்பும் திசையெல்லாம் திருத்தலங்கள் வைகை நதி வரவேற்கும் "திரு ஆலவாய்" எனப் பெறும் கோயில் கொண்ட ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் சோமசுந்தரக் கடவுளாகவும், சொக்கலிங்க நாதராகவும் சொக்கேசவராகவும் ஆலவாய் அண்ணலாகவும் எழுந்தருளி மீனாட்சியம்மை எனும் அங்கயற் கன்னியுடன் அருள்பாலிக்கும் அழகே அழகு! பொற்றாமரைக்குளம் பிரமாண்டமான பிரகாரங்கள், இராஜ கோபுரங்கள் மதுரையின் அடையாளமாக இன்றளவும் திகழ்கின்றது.



பொறி அளவும் இளமதியும் பொலிந்து தோன்றும் பொழில் திகழும் பூவனத்து எம் புனிதனார்க்கே என்று சர்வேஸ்வரனின் அருள் தோற்றத்தையும் இத்தல மாண்பையும் அழகாக குறிப்பிடுகிறார் நாவுக்கரசர் பெருமான்.

திருஞான சம்பந்தப் பெருமான், இத்திருத்தலம் குறித்து 22 பாடல்களுடைய இரண்டு பதிகங்கள் அருளி உள்ளார்.

"பாரார் வைகைப் புனல் வாய் பரப்பிப் பன்மணி பொன் கொழித்துச் சீரார் வாரி சேர நின்ற திருப்பூவணமே" என்று வைகை கரையில் இத்தலம் அமைந்துள்ளதை அழகாக கூறுகின்றார் "முறையால் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் திறையாரொளி சேர் செம்மையோங்குத் தென் திருப்பூவணமே" என்றும், "ஆரா அன்பில் தென்னர் சேரர் சோழர்கள் போற்றிசைப் பத்தேரார் வீதி மாடம் நீடுந்தென் திருப்பூவணமே" பொன்னனையாள் என்னும் பக்தியிற்

சிறந்த அடியவள் கணிகை மாதுவாக இருந்தாலும் ஈசனை முப்பொழுதும் போற்றுபவள் அவளுக்கு உதவ ஈஸ்வரனே சித்தனாக வந்து- இரசவாதம் செய்து பொன் கொடுக்க அவளோ ஈசனின் திரு உருவம் செய்துவிட ஈசனின் தங்கச் சிலை பேரழகுடன் காணப்பெற "அச்சோ அழகு" "அச்சோ பூவணம் என்று கூறி திரு உருவ சிலையின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். இத்தல இறைவனுக்கு "அச்சோ அழகிய பிரான்" என்ற திருநாமமும் உண்டு.

பரஞ்ஜோதி முனிவர் அருளிய திருவிளையாற் புராணத்தில் இரசவாதம் செய்த படலத்தில் அர்ச்சனை படலம் பகுதியில் "தவ சித்தர் இரசவாதம் செய்து சிவனுருவங் கண்ட எழில் நகரும்" என்று உள்ளது. பொன்னனையாள், சித்தர் ஆகியோரின் எழில்மிகு திரு உருவச் சிலைகள் பேரழகுடன் பெரிய அளவில் இத்தலத்தில் திகழ்கின்றன. ஈசனின் கன்னத்தை கிள்ளிய அடையாளமும் சிலையில் உள்ளதை காணலாம்.

அப்பர் என்று அன்புடன் அழைக்கப்பெற்ற திருநாவுக்கரசர் சுவாமிகளும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும், திரு ஞான சம்பந்தர் சுவாமிகளும் இத்தல இறைவனையும், இறைவியையும் உருகி பதிகங்கள் பாடி வழிபட்டு உள்ளனர் மூவர் தமிழில் திருப்பூவண நாதரை பெரிதும் பணிந்து போற்றியுள்ளனர்.

மாணிக்க வாசகரும் தம் பாடல்களில் இத்தல இறைவனை போற்றி வழிபட்டு உள்ளார்.



திருநாவுக்கரசர் திருப்பூவணம் குறித்து தன் திருத் தாண்டகத்தில்-
வடி ஏறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர் சடை மேல் இள மதியம் தோன்றும் தோன்றும்
கடி ஏறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண் குழை தோடு கலந்து தோன்றும்
இடி ஏறு களிற்று உரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழும் திரு முடியும் இலங்கித் தோன்றும்
பொடி ஏறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூ வனத்து எம் புனிதனார்க்கே

திருப்பூவணம் திருத்தாண்டகத்தில் திருநாவுக்கரசர் பதினொரு பாடல்களை உள்ளம் உருக பாடி உள்ளார்.

ஒவ்வொரு பாடல்களிலும் ஈசனின் அற்புத தோற்றங்களையும், அருள் நலத்தையும் குறிப்பிடும் திருநாவுக்கரசர் திருப்பூவண திருத்தலத்தின் சிறப்புகளை மிகுந்த சிறப்புடன் குறிப்பிடுகிறார்.

ஒவ்வொரு பாடல் முடிவிலும் "பொழில் திகழும் பூவனத்து எம் புனிதனார்க்கே" என்று குறிப்பிடுவது அழகு நலம் மட்டுமல்ல அருள் நலம்மிக்கது.
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்

வார் உருவப் பூண் முலை நல் மங்கை
தன்னை
மகிழ்ந்து ஒரு பால் வைத்து கந்த வடிவும் தோன்றும்
நீர் உருவக் கடல் இலங்கை அரக்கர் கோனை



நெறு நெறு என அடர்த்திட்ட நிலையும் தோன்றும்
போர் உருவக்கூற்று உதைத்த பொற்புத் தோன்றும்
பொழில் திகழும் பூவனத்து எம் புனிதனார்க்கே'.. வைகையாற்றில் போடப்பெறும் எலும்புகள் மலராகவோ கல்லாகவோ ஆகும் என்பது ஐதீகம். இத்தல தீர்த்தத்தில் தர்மக்யன் என்னும் ஓர் அந்தணனின் அஸ்தி புஷ்பமானதாக இத்தல புராணம் குறிப்பிடுகிறது. வைகையாற்றின் கரையில் உள்ள மணல் எல்லாம் சிவலிங்க மூர்த்தியாக தோன்றியமையால் அப்பர் என்று அழைக்கப்பெறுகின்ற திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திரு ஞான சம்பந்தர் ஆகிய மூவர் மிகுந்த பக்தியுடன் வழிபட்டு உள்ளனர். திருப்பூவனம் நான்கு பகுதிகளுடையது பழையூர், புதூர், கோட்டை, நெல் முடிக்கரை என்பன. கோட்டை என்ற பகுதியில் தான் திருப்பூவண நாதர் திருக் கோயில் அமைந்து உள்ளது. ஓர் அடியவர் தன் சீடர்களுடன் இராமேஸ்வரம் தீர்த்தத்தில் கரைப்பதற்காக ஒரு கலசத்தில் ஒரு அடியவரின் அஸ்தியை வைத்து மூடி எடுத்து வந்த போது இத்தலம்அருகே ஓய்வு எடுத்த போது ஒரு சீடர்- அதை திறந்து பார்த்தப் போது பூவாக காட்சி அளித்தது.

உடனே சீடன் குருவிடம் இதனை தெரிவிக்க திகைப்புற்ற குருவும் ஈசனின் கருணையை எண்ணி வியந்து இத்தல தீர்த்தத்திலேயே அந்த அடியவரின் அஸ்தியை கரைத்ததாக ஐதீகம்.

"மின்னனையாள் திருமேனி விளங்குவோர் தன்னமர் பாகமதாகிய சங்கரன்" என்று இத்தலத்தில் எழுந்தருளிய அம்பிகையின் திருப்பெயரை குறித்துள்ளது குறிப்பிடத்தக்கது. முடியுடைய மூவேந்தர்களும் மனமுருக வழிபட்டதை குறிப்பிடுகின்றார். திரு ஞான சம்பந்தர். பூவனத்துறை ஈசனை மலர் புனைந்தேத்துவர் வினை நாசனை அடி தொழ நன்மையாகுமே என்றும், "பூவனந்தனைப் பரவிய அடியவர்க்கில்லை பாவமே" என்றும் ஈசனருளை குறிப்பிடுகின்றார். இத்தல முருகப் பெருமானையும், இத்திருத்தல அம்பிகையைப் பற்றியும் "மீனனைய நுண்ணிடையாள் பாகம் தோன்றும்" என்று அழகாக குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசர் "ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்று எழிலுற தெளிவு படுத்துகின்றார் திருநாவுக்கரசர் சுவாமிகள்.

திருநாவுக்கரசர் அருளிய தேவாரப் பதிகத்தில் இத்தலத்தில் எழுந்தருளிய சிவலிங்கத்தின் மீது


திரிசூலம் இருப்பதை தரிசித்த அவர் தம் பாடலில் வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும் என்று வையை வடகரையிலிருந்தே பாடியுள்ளார்.

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்க்கு ஆரமுதம் ஆகித் தோன்றும்
எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகத்தில்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே என்ற வரிகளில் திருப்பூவணத்தின் சிறப்பை உணர்த்துகிறார்.

இதணைத்தான் திருநாவுக்கரசர்,
"பொல்லாத புலால் எலும்பு பூணாய் தோன்றும் பொழில் திகழும் பூவனத்து எம் புனிதனார்க்கே"
ஏன் இவ்வாறு குறிப்பிடுகின்றார் என்றால் இத்தல தீர்த்தத்தில் (வைகையாற்றில்) இடப்பெறும் அஸ்தி எலும்புகள் பூவாக மாறுவது ஐதீகம் என்பதை உணர்ந்த திருநாவுக்கரசர் தெளிவுபடுத்துகிறார்.

இவ்வளவு சிறப்புக்கள் கொண்ட இக்கோயிலை தரிசித்தால் முக்தி கிடைக்கும். அனைத்து சக்தியும் கை கூடும்! வணங்குவோர் யாராக இருந்தாலும் உண்மையாக வழிபட்டால் உடனே அருள் மழை பொழியும் அருள் வள்ளலாக மட்டுமல்ல பொருள்- புகழ் ஆயுள், பட்டம், பதவி என அள்ளித் தரும் ஈசனாக அருட்காட்சி அளிக்கின்ற. திருவருளை உணரலாம்!

திருமுறைகளில் மிகுந்த சிறப்புடன் போற்றி பணிந்து வழிபட பெறும் திருப்பூவண நாதரை நாமும் தரிசிப்போம். திருவருள் யாவும் பெறுவோம்.



SWASASUGAM SYRUP
For Clearing Respiratory Tract
Call: 88702 88701

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# அனைவரையும் கவர்ந்து செல்வாக்கு பெற

"சத்வித்யா"வின் இந்த இதழில் நாம் அறியப்போகும் மந்திரம் வசீகரணம் எனப்படும் வசியத்தைப் பற்றியது. அன்னையின் அழகை விவரிக்கும் சௌந்தர்ய லஹரியின் இரண்டாவது பாடலான இந்த மந்திரத்தை பிரயோகம் செய்து ஜபிக்கும் போது அனைவரையும் கவர்ந்து செல்வாக்கைப் பெறுகின்ற ஆற்றல் கைகூடும். அவ்வாறு கைகூடும் வேளையில் பார்க்கும் மனிதரிடத்தில் எல்லாம் வசியம் உண்டாகி அதீத புகழ்பெற்று அனைவராலும் விரும்பப்பட்டு செல்வாக்குள்ள நபராக திகழ முடியும்.

**மந்திரப்பாடல்:**

"தநியாம்ஸம் பாம்ஸீம் தவசீரண- பங்கேரு ஹ- பவம் விரிஞ்சி ஸஞ் சின்வன் விரசயதி லோகா-
னவிகலம் வஹத்யேனம் சௌரி கதமபி ஸஹஸ்ரேண சிரசாம் ஹர: ஸம்லைனம் பஜதி பஸி
தோத்தூளான விதிம்

**பாடலின் பொருள்:**

அகில உலகின் அன்னையே! உன் பாதங்களில் உள்ள சின்னஞ்சிறு தூசு துகள்களைக் கொண்டு பிரம்மன் இந்த உலகினைப் படைக்கிறார். அப்படி படைக்கப்பட்ட உலகினை ஆதிசேஷன் சிரமப்பட்டு எப்படியோ சுமக்கிறார். இறைவன் சிவபெருமானோ அதனை நன்கு பொடியாக்கி, அதாவது நீறாக்கி, திருநீறாக அணியும் புனித முறையினை இன்றளவும் பின்பற்றி வருகிறார்.

அப்படி உலகமே அடங்கியுள்ள திருநீற்றின் மகிமை யாதெனில், இதனை சிவச்சின்னமாக தரித்துக் கொள்வதால் எமக்கு அனைவரும் வசியமாகி, ஒப்பில்லாத செல்வாக்கைக் கொடுப்பாய் தாயே!

**மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:**

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தைக் கண்டறிந்து தங்கத் தகட்டில் வரைந்து பூஜைக்குப் பயன்படுத்த வேண்டும்.

தினமும் ஆயிரம் முறை வீதம் குறைந்தபட்சம் 12 நாட்களுக்கு வடக்கு முகமாக அமர்ந்து ஜபிக்க வேண்டும்.

குங்குமத்தினைக் கொண்டு லலிதா திரிசதி அர்ச்சனை செய்தல் நலம்!

தேங்காய், பழம், பால் பாயசத்தை நைவேதியமாக படைக்க வேண்டும்.

இதனை முறைப்படி செய்வதால் சுற்றிலும் உள்ளோரை வசியம் செய்யும் ஆற்றல் பெருகி செல்வாக்கு உயரும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# முக்திபெற என்ன வழி?

## ஸ்ரீ லலிதோபாக்யானம்

சகல வேதங்களையும், சர்வ சித்தாந்தங்களையும் உணர்ந்து பிரம்மானந்த ஸ்வரூபியாக விளங்கும் அகத்திய மாமுனிவர் ஒரு சமயம் சகல புண்ணிய ஸ்தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டார்.

எங்கும் அஞ்ஞான இருள் சூழ்ந்திருப்பது கண்டு மனம் நொந்து, அவர்களை நற்கதிக்கு உய்விப்பது எங்ஙனம் என்று எண்ணியவாறே காஞ்சி நகருக்கு சென்றார்.



உலக நலன் கருதி, அந்த உலகளந்த உத்தமனை நோக்கி கடுந்தவம் புரிந்தார். அவரது தவத்தினால் மகிழ்ந்த மாலவன், அவர் முன் ஹயக்ரீவராகத் தோன்றினார்.

பரவசமடைந்த அகத்தியர், அவரை பலவாறாக போற்றி துதித்தார். பக்தவத்சலனான பரந்தாமன், "முனிவரே!! உமது தவத்தால் உள்ளங்குளிர்ந்தோம். வேண்டும் வரம் யாது?" என வினவினார்.

ஹே ஜனார்த்தனர்  இப்பாமர ஜனங்கள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து, பேரானந்தம் பெற ஒரு மார்க்கத்தினை உரைக்க வேண்டும் என்று வேண்டினார்.

அதனைக் கேட்ட ஹயக்ரீவர், முன்னர் இதே கேள்வியை யாம் எழுப்பிய போது எனக்கு இந்த மார்க்கம் சிவனாரால் உபதேசிக்கப்பட்டது.

பின்னர் இந்த கேள்வி பிரம்மனாலும், பின்பு துர்வாசராலும், இப்போது உம்மாலும் எழுப்பப்பட்டது. எனவே, யாம் உரைக்கும் இந்த மார்க்கம் உன் மூலம் உலகெலாம் பிரசித்தி பெற வாழ்த்தி வரமளிக்கிறோம் என்றார்.

இந்த மார்க்கத்தினால் பாமரரும், பாவிகளும் கூட நற்கதியை அடைய முடியும். அது என்னவென்றால்:


அனைத்துக்கும் ஆதிகாரணமாக விளங்கும் ஜகன்மாதா பராசக்தியை பூஜிப்பதே ஆகும்.

முனிவரே!! எவனொருவன் தனது மனம், வாக்கு, சொல், செயல் என அனைத்தையும் தேவியிடம் சமர்ப்பித்து தான் வேறு, தேவி வேறல்ல என்று உணர்கிறானோ, அவன் எளிதில் முக்தியை அடைகிறான்.

மேலும் இம்முறையானது மிகவும் ரகசியமானது. உமது தபோபலத்தாலும், உலகம் உய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தினாலுமே உமக்கு இதை உபதேசிக்கிறோம்.

உன் மூலம் இவ்வுலகமும் இதனை உபதேசம் பெற்று சுகிக்கட்டும் என்றுரைத்தார்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்



# அனுமன்மகிமை
# ஒரு கல்லிலே மூனு மாங்காய்

ராமஜெயம் அம்மாள் என்னும் அந்தப் பெண்மணியின் தங்கச்சங்கிலியை ஒரு திருடன் மலைப்படிகளிலேயே அறுத்தெடுத்துக் கொண்டு ஓடிவிட, அதைப் பார்த்த உபாசகர் அப்படியே விக்கித்துப் போனார். உபாசகரின் வயது அவனைத் துரத்திச் செல்ல அனுமதிக்கவில்லை. அந்தப் பெண்மணியோ கதற ஆரம்பித்து விட்டார். அப்போதுதான் அவர் அந்தத் திருடன் அறுத்துச் சென்றது ஒன்பது பவுனிலான தனது தாலிச் சங்கிலி என்பதையும் தெரிந்து கொண்டார். அது இன்னமும் கலக்கத்தைக் கொடுத்தது.

உபாசகரும் அந்த அம்மாளை நெருங்கி ஆறுதல் கூற முற்பட்டார்.

"ஐயோ சாமி' அவன் என் கழுத்துல வேற எந்த நகையை அறுத்துட்டுப் போயிருந்தாலும் நான் இவ்வளவு கவலைப்பட மாட்டேன். அவன் கொண்டு போனது என் தாலியை" என்றபோது உபாசகருக்கு மேலும் அதிர்ச்சியாகியது.

"சாமி' கோவிலுக்கு வந்த இடத்துல இப்படி நடந்துடுச்சே' அப்ப என் புருஷனுக்கு ஏதாவது ஆபத்து வந்துடுமா? எனக்கு பயமா இருக்கு சாமி" என்று கண்ணீர் விட்டு அழுதார் அந்தப் பெண்மணி. சுற்றிலும் வேறு சிலர் கூடி விட்டனர்.

"ஹூம்' எல்லாம் கலிகாலக் கொடுமை" என்றார் ஒருவர்.

"இன்னும் ஏம்மா சும்மா இருக்கீங்க' போய் முதல்ல போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுங்க" என்றார் இன்னொருவர்.

"ஆமா' உடனே போய் திருடனைப் பிடிச்சுட்டுத் தான் அவங்களும் மறுவேலை பாப்பாங்க" என்றார் மூன்றாமவர். இப்படி ஆளுக்கு ஆள் பேச்சு.

அந்தப் பெண்மணியோ சட்டென்று ஒரு வைராக்கியத்துக்கு மாறினார்.

"அய்யா நான் அந்த ராமனுடைய பக்தை. இதுவரை பல கோடி முறை ராம நாமத்தை எழுதியிருக்கேன். ஜெபிச்சுமிருக்கேன். அதனால என்னையே ராமஜெயம் அம்மான்னுதான் கூப்பிடுவாங்க. அப்படிப்பட்ட எனக்கு இப்படி ஆயிடுச்சுன்னா அதுகூட அந்த ராமனோட எண்ணமாதான் இருக்கணும். இதை நான் நல்லதுக்குன்னே எடுத்துக்கறேன்" என்றார்.

எல்லாருக்குமே அந்த அம்மாவின் பேச்சு ஆச்சரியம்தான் தந்தது. ஆனால் உபாசகர் மனம் மட்டும் சஞ்சலப் பட்டபடியே தான் இருந்தது. அந்த அம்மாவும் சட்டப்படி போலீஸ் கம்ப்ளைன்ட் தருவதற்காகச் செல்ல, உபாசகர் திரும்ப மலைமேல் ஏறினார். திருச்சந்நிதிக்குச் சென்று அப்படியே நின்று விட்டார். அவருக்குள் பெரும் எண்ணப் போராட்டம்!

ஒரு கோயிலில் இப்படி ஒரு அடாத செயல் நடந்துள்ளது. இதை கேள்விப்படுபவர்கள் கோவிலிலேயேவா என்றுதான் முதலில் கேட்பார்கள். அடுத்து கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்குத் தாவி விடுவார்கள். அவர் இருந்தால் தன்னுடைய இடத்திலேயே இப்படி எல்லாம் நடக்க விடுவாரா என்றும் கேட்பார்கள்.



எப்படிப் பார்த்தாலும் இந்த திருட்டுச் சம்பவம் எல்லா வகையிலும் தவறானதாக ஜீரணிக்க முடியாததாகவே இருப்பதை அவர் புரிந்து கொண்டு கண்ணீர் சிந்தத் தொடங்கினார்.

அவர் ராமனுடைய வரலாறை கரைத்துக் குடித்திருப்பவர். ஆந்திராவில் பத்ராசலம் என்றொரு இடம். அங்கே ஒரு ராமர் கோவில் மிகப் பிரபலம். அந்த ஊரை பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நவாப் தான் ஆண்டு வந்தான். தானீஷா என்பது அவன் பெயர். அவன் ஆட்சியில் கோபண்ணா என்பவர் பத்ராசலத்தின் தாசில்தாராக இருந்தார். இந்த கோபண்ணா தான் ராமர் கோவிலைப் புதுப்பித்துக் கட்டியவர். அதற்குப் பணம் தேவைப் பட்டபோது, மக்களிடம் வரியாக வசூலித்த பணம் இருந்தது.

அந்தப் பணத்தை அப்படியே கோவில்கட்ட செலவிட்டு விட்டார். இதையறிந்த தானீஷா, எனக்கான வரிப்பணத்தை எடுத்து என்னிடம் அனுமதி வாங்காமல் நீ எப்படி கோவில் கட்டலாம் என்று கேட்டு அவருக்கு 12 வருட சிறைத் தண்டனையை விதித்து விட்டான். கோபண்ணா உடனே ராமனை எண்ணி உருகி அழுதார். இந்த நிலையில் ராமபிரான் லட்சுமணனுடன் வேடர்கள் வடிவில் வந்தான். தானீஷாவைச் சந்தித்து, கோபண்ணா சார்பாக அவர் கோவில் கட்ட செலவழித்த அவ்வளவு பொற்காசுகளையும் திரும்பக் கொடுத்தார். தானீஷாவும் கோபண்ணாவை விடுதலை செய்தான். பிறகு தான் தனக்காக வந்து தானீஷாவிடம் பணம் கட்டியது சாட்சாத் அந்த ராமனும் லட்சுமணனுமே என்பது தெளிவானது.

ராமபிரான் தன் பக்தர்களைக் காப்பாற்ற இப்படி பல தருணங்களில் திருவிளையாடல் புரிந்துள்ளார். அதெல்லாம் கோவிலின் திருச் சந்நிதியில் நின்றபடி இருந்த உபாசகருக்குள்ளும் ஓடியது. அவர் மனமும் ராமஜெயம் அம்மாள் வரையிலும் ராமன் அதுபோல் ஒரு அற்புதம் நிகழ்த்த வேண்டும் என்று நினைத்தது. அதன் நிமித்தம் அவர் அங்கேயே ஒரு ஓரமாக அமர்ந்து, அனுமனுடைய மூல மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே தியானத்தில் அமர்ந்து விட்டார்.

அவருக்கு இப்போது ஒரே நோக்கம்தான்!

ராமஜெயம் அம்மாளுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதாவது தொலைந்த நகை திரும்பக் கிடைப்பது மட்டுமல்ல அந்தத் திருடன் தண்டிக்கப்படவும் வேண்டும் என்று பிரார்த்தனை செய்யத் தொடங்கி விட்டார். அப்படி ஒரு நல்லது நடக்கும் வரை உணவு உண்ணப் போவதில்லை என்று சங்கல்பமும் செய்து கொண்டார்.

இந்நிலையில் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ற ராமஜெயம் அம்மாளும் புகார் கொடுத்து விட்டு திரும்பிக் கொண்டிருந்தார். அந்த அம்மாளின் வீடு மிகப் பெரியது. வீட்டைச் சுற்றிலும் மரங்கள். அவர் வீட்டுக்குள் நுழைந்து நடந்ததை உறவினர்களிடம் கூறிவிட்டு நிதானமாக கொல்லைப்புறம் செல்லவும், அங்கிருந்த மரத்தில் குரங்கொன்று உட்கார்ந்தபடி இருந்தது. அதை ராமஜெயம் அம்மாள் கவனிக்கவில்லை. ஆனால் அதுவோ அந்த அம்மையாரைப் பார்த்தது. பின் தன் கையை உயரத் தூக்கியது. அப்போது அதன் கையில் ராமஜெயம் அம்மாளின் தங்கச் சங்கிலி. அதை அம்மாள் மேல் வீசி எறிந்தது. சொத்தென்று தன்மேல் வந்து விழுந்த சங்கிலியைப் பார்க்கவும் அந்த அம்மாளுக்கு ஒரே மகிழ்ச்சி. நிமிர்ந்து பார்த்திட குரங்கு தெரிந்தது. அடுத்த நொடியே ஆஞ்சநேயா என்றுதான் பரவசமானார் அந்தப் பெண்மணி. ஆனால் அந்தக் குரங்கு வேகமாய் ஓடிவிட்டது. கொல்லையிலிருந்து சங்கிலியும் கையுமாக வந்த அந்தப் பெண்மணி திரும்பவும் நடந்ததைக் கூறவும் எல்லாருக்கும் ஒரே வியப்பு

"அந்தக் குரங்கு நிச்சயம் ஆஞ்சநேயர்தான். எனக்குச் சந்தேகமில்லை" என்று பக்திப் பரவசத்துடனேயே கோயிலுக்குப் புறப்பட்டார்.

திருநீர்மலைக்கு வந்து படிகளில் அவர் ஏறத் தொடங்கும்போது, கீழே கடை போட்டிருந்தவர்கள் ஓடிவந்து என்ன நடந்தது என்று கேட்டனர். ராமஜெயம் அம்மாள் கூறவும், அப்படியே வாயைப் பிளந்து விட்டனர்.

"இப்பதான் தெரியுது. பேண்ட் சட்டை போட்ட ஒருத்தன் தலைதெறிக்க ஓடினான். பார்த்தப்போ குரங்கு ஒண்ணு அவனைத் துரத்திக்கிட்டே வந்துச்சு. அநேகமாக அவன்தான் சங்கிலியைத் திருடியிருக்கணும். துரத்தின குரங்கு எப்படியோ அவன்கிட்ட இருக்கற சங்கிலியைத் தட்டிப் பறிச்சிருக்கணும்" என்றார் ஒருவர்.

ராமஜெயம் அம்மாளும் அதை ஆமோதித்தவராக மலை ஏறினார். உபாசகர் சந்நிதியிலேயே இருந்தார். அவரிடம் சாமி நகை கிடைச்சிடுச்சு என்று ராமஜெயம் அம்மாள் கூறவும், உபாசகர் கண் மலர்ந்தார். அப்பாடா என்றிருந்தது. "இப்ப நினைச்சாலும் பிரமிப்பாக இருக்கு. கரெக்ட்டா என் வீட்டுக்கு வந்து அது நகையை திருப்பித் தந்ததை நினைச்சா எனக்கு புல்லரிக்குது" என்று கூறி கண்ணீர் சிந்தினார். பிறகு தான் அடுத்தடுத்து பல தகவல்கள் வரத் தொடங்கின.



அந்தத் திருடன் பல வருடங்களாகவே திருநீர் மலைக்கு வருபவர்களிடம் திருடியுள்ளான். கோவில் உண்டியலை உடைக்கவும் முயன்று தோற்றவனாம் அவன். அப்படிப்பட்டவன் ஓடவும், குரங்கும் துரத்தியுள்ளது. தலைதெறிக்க ஓடியவன் சாலையில் எதிரில் வந்த லாரியில் அடிபட்டு தூக்கி எறியப்பட்டிருக்கிறான். அப்போது சங்கிலியும் எங்கோ போய் விழ, அதைத்தான் குரங்கும் எடுத்துவந்து தந்துள்ளது. அடிபட்ட அவன் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான் என்பதும் தெரிய வந்தது. ராமஜெயம் அம்மாள் அப்படியே அதைக் கேட்டு விக்கித்துப் போனார். உபாசகர் தன் விரதத்தை முடித்துக் கொண்டார்.

ராமஜெயம் அம்மாள் வீடு திரும்பினார். அவர் கணவர் எதிரில் கை கால்களிலெல்லாம் கட்டுப் போட்டுக் கொண்டு வந்தார். என்னாயிற்று என்று கேட்ட போது, வரும் வழியில் ஒரு விபத்து நேர்ந்து விட்டதையும் அதில் உயிர் பிழைத்ததே பெரும்பாடு என்றும் கூறினார். ராமஜெயம் அம்மாளுக்கு உடனேயே பல உண்மைகள் புரிந்து விட்டன. பெரிதாக தனக்கு வர வேண்டிய ஒரு துன்பம்தான் இப்போது சிறிதாக தாங்கும் அளவுக்கு மாறியிருக்கிறது என்று.

அப்போது உபாசகரும் அங்கு வந்தார். அதை ராமஜெயம் அம்மாள் எதிர்பார்க்கவில்லை. அவரை வரவேற்று அமரச் செய்து உபசரிக்கத் தொடங்கினார். அப்போது உபாசகரும் ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறுவதற்காக வந்ததைக் கூறி, சொல்லத் தொடங்கினார்.

"அம்மா' மலைல உங்களுக்கு ஏற்பட்டது ரொம்ப வருத்தமான விஷயம். நான் உடனேயே மலைக் கோவிலுக்குப் போய் உபாசனைல உட்கார்ந்துட்டேன். கோவில்லயே இப்படியெல்லாம் நடந்தா எப்படிங்கறதுதான் என் பிரதான வருத்தம். எப்பவும் என் உபாசனா சமயத்துல அனுமன் பிரத்யட்சமாகறது உண்டு. அப்பவும் வந்தான்! கவலைப்படாதே. எல்லாம் நல்ல விதமா முடியும். அந்த அம்மாவுக்கு தாலியை இழக்கற ஒரு தோஷம் இருக்கு. ஒரு நாழிகையாவது அவங்க தாலி இல்லாம இருக்கணும். அதேபோல் அவள் கணவருக்கும் கண்டம் இருக்கு. இரண்டு கணக்கையும் நேர் செய்து அவங்களுக்கு அனுக்ரஹம் பண்ண வேண்டியது என் கடமை. இதுஎன்தெய்வமான ராமபிரான்உத்தரவு.

என்தெய்வத்தோட நாமத்தைளப்பவும் உச்சரிக்கறதோட பலரையும் உச்சரிக்க வைச்சவங்கஅவங்க. அவரைநான்கைவிட மாட்டேன்” அப்படின்னு சொன்னான். நான் கண்விழிக்கவும் நீங்களும் சங்கிலியோடு வந்து நின்னீங்க.

இங்க வரவும், உங்க கணவரும் விபத்துல தப்பி வந்தது தெரிஞ்சது. ஒரு பெரும்கெட்டநேரத்தை அனுமன் மிகச் சிறியதா மாத்தி,
விதிப்படியும் எல்லாம் நடந்த மாதிரி செய்துட்டான்.

ஒரு கல்லுல இரண்டு மாங்காய் அடிக்கறதுன்னு சொல்வாங்க. இங்க ஒரு கல்லுல இரண்டு இல்லை, மூன்று மாங்காய் அடிச்சிருக்கான். அதாவது உங்க தோஷம்,
உங்க கணவர் தோஷம் நீங்கி, அந்தத் திருடனுக்கு பாடம் புகட்டிட்டான். நான் அடுத்து ஆஸ்பத்திரிக்கு அவனைப் பார்க்கத்தான் போய்க்கிட்டிருக்கேன். வழில இத உங்கள பாத்து சொல்ல வந்தேன் ” என்றார் உபாசகர். ராமஜெயம் அம்மாள் மட்டுமல்ல அவர் கணவரும் ஆனந்தக் கண்ணீர் சிந்தினார்.

~ முகநூல் பதிவு







# மூலிகை ரகசியம்

## மூக்குத்திப்பூ செடி

இந்த இதழில் நாம் பார்க்கவிருக்கும் மூலிகை மூக்குத்திப்பூ என்னும் செடி வகையைச் சேர்ந்த மூலிகையாகும். இதற்கு வெட்டுக்காயப் பூண்டு என்ற வேறொரு பெயரும் உண்டு அதோடு, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இந்த மூலிகைச் செடி மனித குலத்திற்கு அரும்பெரும் மருத்துவ தொண்டாற்றி வருகிறது.

சாலையோரங்களிலும் நீர் நிலைகளிலும் செழித்து வளரக் கூடியது இந்த செடி! அழகான சிறிய பூக்கள் பூப்பதால் இதனை மூக்குத்தி பூ செடி என்று அழைப்பார்கள். இதன் பசிய இலைகள் சற்றே சுரசுரப்புடன் காணப்படும்.

இதன் இலைகள், பூ, வேர் முதலியன பற்பல நோய்களுக்கு மருந்தாகிறது.



### குணப்படுத்தும் நோய்கள்:

சீதள நோய்கள், சுவாசக் கோளாறுகள், தலைவலி, ஒற்றைத் தலைவலி, தலையில் நீர் கோர்த்தல், மூட்டு வலி, சொறி, சிரங்கு, வெட்டுக் காயங்கள், வயிற்றில் உண்டாகும் புண் போன்ற நோய்களுக்கு மருந்தாகிறது இந்த மூலிகை!

### பயன்படுத்தும் முறை:

தலைவலி, நீர் கோர்த்தல், சீதளம் நீங்க'.

மிளகு ரசத்தில் இதன் இலைகளை கழுவிப் போட்டு கொதிக்க வைத்து குடிக்கலாம்.

வெட்டுக் காயங்கள் மற்றும் நாட்பட்ட புண்களுக்கு இதன் இலைகளை கசக்கி சாறை விடுவதாலும் இலையை அரைத்துக் கட்டுவதாலும் குணமாகும்.

இதன் பூ, வேர், இலைகளை அரைத்து நல்லெண்ணெயில் வதக்கி கட்டினால் கை, கால், மூட்டு வலி பறந்து போகும்.

இந்த இலைகளை பச்சையாக, வாயில் போட்டு மென்று சாறினை விழுங்குவதால் சர்க்கரை நோய் கட்டுப்படும். இரத்த அழுத்தம் சீராகும். இதோடு வயிறு, கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றில் உள்ள புண்கள் ஆறும்.

இத்தனை அற்புத குணங்கள் கொண்ட மூக்குத்திப் பூ செடி என்னும் மூலிகையை பயன்படுத்தி ஆரோக்கிய வாழ்வினைப் பெறுங்கள்.

~ ரா. பன்னீர்செல்வம்

# நல்லதை சிந்திப்போம் நல்லதை பேசுவோம் நல்லதையே செய்வோம்

நல்லவை நமக்கு நடக்க வேண்டும் என்று நாம் எல்லோரும் விரும்புவோம்! இது தவறு அல்ல. நமக்கு மட்டுமே நல்லவை நடக்க வேண்டும் என்பது சரியல்ல.

சிந்திப்பதிலும் நல்லவை இருக்க வேண்டும் செயலிலும் நல்லவை மட்டுமே இருக்க வேண்டும் பேசும் பேச்சிலும் நல்லவை மட்டுமே இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட மனிதர்களை எல்லோரும் விரும்புவர். நல்லவன் வாழ்வான், என்பார்கள் இதன் பொருள் யாதெனில் அவன் மறைந்தாலும் இந்த உலகம் உள்ளவரை அவன் இறவாப்புகழுடன் எல்லோரது உள்ளங்களிலும் நிறைந்து இருப்பான்.



யாக்கை நிலையானது அல்ல. நீர்க்குமிழி போன்றது தான் வாழ்கை! ஆற்றங்கரையில் கம்பீரமாக இருந்த மரமாக இருந்தாலும் அரசர் அறியும் படியாக வாழும் வாழ்கை கொண்டவராக இருந்தாலும் ஒரு நொடிப் பொழுதில் இல்லாமல் போவது உண்டு. முடியுடைய மூவேந்தராக இருந்தாலும் ஓர் நாள் பிடி சாம்பலாக மாறுவது உண்மை.

வித்தாக இருந்து விருட்சமாக உயர்ந்தாலும் இலையுதிர்காலம்- வசந்தகாலம்- என மாறிமாறி கடைசியில் பொலிவிழந்து- சருகாகி- பட்டுப்போய் உருக்குலைந்து போவதும் உண்டு.

அது போன்றதுதான் மனித வாழ்க்கையும். குழந்தைப் பருவத்தில் அன்னை மடியில் தவழ்ந்து இளமைப் பருவத்தில் அருமைத் தோழியின் தோளில் சாய்ந்து- நடுத்தர வயதில் மனைவி அன்பில் தோய்ந்து வயோதிகப் பருவத்தில் ஆலயமே கதியாய் வலம் வந்து ஓர் நாளில் இறைவன் திருவடியில் சேர்வதும் இயல்பு தானே. இது தானே யதார்த்தமான உண்மை!

இந்த உலகில் நாம் இருக்கின்ற ஒவ்வொரு நொடியும் இறைவன் நமக்குத் தந்த வரப்பிரசாதம் இதை உணர்ந்து நம்மையும், நம்மை சேர்ந்தவர்களையும் மகிழ்ச்சி படுத்துவது நல்லது.

விழிகள் இருக்கும் போதே கருணையும் இரக்கத்தையும் கொண்டு பரிவுடனும் தயவுடனும் நடக்க

வேண்டும். நாளும் ஏழைகளுக்கு உதவ வேண்டும்.
கைகள் நன்றாக இருக்கும் போதே பிறருக்கு உதவ வேண்டும். பிறர் விழி நீரை துடைக்க வேண்டும். சிந்தை சிறப்புடன் இருக்கும் போதே அடுத்தவர் நலன்களையும் சிந்தித்து செயலாற்ற வேண்டும். இன்றைய உலகில் பசுத் தோல் போர்த்திய கொடிய விலங்குகளை விட கொடியவர்கள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

நமக்கு கண் காணிப்பு கேமரா கடவுள் தான். கடவுளால் நாம் கண்காணிக்கப்படுகிறோம் என்பதை ஏனோ மறந்து விடுகிறோம்.



இறை அச்சம் நமக்குத் தேவை. முதலாளிக்கு தெரியாமல் நாம் செய்கிற பிழை தெரிந்து விட்டால் என்ன ஆகும் என்று பயப்படுவது போன்று- நாம் செய்கிற இழி செயல்கள் கடவுளுக்கு தெரிந்தால் என்ன ஆகும் என்று என்றாவது கவலைப் பட்டோமா? ஒவ்வொருவரும் முக கவசம் போடுகிறோம் இது தவறல்ல. உடல் ஆரோக்கியமுடனும் திகழ முகக் கவசம் முக்கியம். ஆனால் நல்லவர்கள் போல நடித்து கெட்ட செயல்கள் புரிந்து வாழும் மனிதர்களை மக்கட் பதர் என்று வள்ளுவரும் சாடுகிறார். தன்னிடம் வேலை பார்க்கும். ஒரு தொழிலாளியை சகட்டு மேனிக்கு வாயில் வந்த குப்பை சொற்களை கொட்டும் தேள் கொட்டுவதைப் போன்று மனிதர்கள் எந்த வேடம் அணிந்து வாழ்ந்தாலும் அவர்கள் எதற்கும் உதவாத உதவாக்கரைகள்.
ஒருவன் வியர்வை காய்வதற்குள் அவன் ஊதியத்தை கொடுத்து விட வேண்டும் என்பது ஆன்றோர் அருளும் அமுத மொழி! ஒரு சில முதலாளிகள் ஏழை எளிய தொழிலாளர்கள் சரியில்லை என்றும் அவர்களால் பயனில்லை என்று தெரிந்து விட்டால் போதும் அவர்களை தூக்கி எறிவதுடன், அவர்களது நியாயமான சம்பளத்தையும் கொடுக்க துளி கூட நல்ல மனம் இல்லாமல் அலட்சியப் போக்குடன் நடந்தால் அவர்களுக்கு எங்கே இறையருள் கிடைக்கும்? இரண்டு மூன்று மாதங்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாமல் வாழும் மனிதர்கள் பசியும் பட்டினியுமாக இருந்தால் அவர்கள் எங்கே போவார்கள்? அந்தக் காலங்களில் அன்ன சத்திரங்கள் அகன்ற திண்ணைகள், விருந்தோம்பல், வலிய சென்று உதவுதல் என்று வாழ்ந்ததால் தான் நீண்ட காலம், மக்கள் நோய் நொடியின்றி வாழ்ந்தனர்.
எதுவுமே உயர்ந்தவையும் இல்லை தாழ்ந்தவையும் இல்லை.
இராஜ கோபுரம் போல் நாம் வாழ்வில் உயர தீய எண்ணங்களுக்கு விடை கொடுத்து , திருக்குளத்தில் மூழ்கி எழுந்திட வேண்டும்
கோயில் பிரகாரத்தை பணிந்து போற்றி வழிபட வேண்டும்!
நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு- கோபுர தரிசனம் கோடி புண்ணியம்! உயிர் இரக்கத்துடன் உருவம் கண்டு எள்ளுதல் இன்றியும் மற்றவர் உணர்வுகளையும் மதிப்போம். ஈஸ்வர அருள் பரிபூரணமாக எல்லோருக்கும் கிடைக்கும்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# சௌந்தர ராஜ பெருமாள் ஆலயம்

திண்டுக்கல்லில் இருந்து கரூர் செல்லும் பிரதான சாலையில் உள்ள ஒரு ஊர் தான் தாடிக் கொம்பு! இந்த ஊரில் சௌந்தர ராஜ பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் பெருமாளின் புகழைப் பறை சாற்றுவது மட்டுமில்லாமல் சிற்பக் கலையின் சிறப்பை உலகுக்கு எடுத்துக் காட்டும் உன்னத கலைப் படைப்பாய் திகழ்கிறது.
இந்த ஆலயத்தில் தாயார் சன்னதியின் முன் மண்டபத்தில் இடது, வலதாக இரு புறமும் 14 தூண்கள் அமையப் பெற்றுள்ளன. இந்த தூண்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 7 அடி உயரம் கொண்ட அற்புத சிற்பங்கள். கலைப் பொக்கிஷங்களாய் அணி வகுத்து நிற்கும் காட்சி. ஆன்மீகப் பரவசத்தை நமக்கு அளிப்பதோடு, பண்டைய தமிழர்களின் சிற்பத் திறமைக்கு சிகரம் வைத்தாற் போல் திருவினைத் தாங்கும் உருவினை உடையதாய் விளங்குகின்றது.



இந்த 14 சிற்பங்களும் தமிழகக் கோயில்கள் சிலவற்றில் மட்டுமே இருக்கக் கூடிய நிகரற்ற சிற்பப் பெருமைகளை உடையதாய் உள்ளது. இந்த அழகு மிளிரும், சிற்பங்கள் ஆன்மீக சிறப்புகளையும், தன்னகத்தே கொண்டுள்ளது! எப்படி என்பதனை காணலாம்.

இங்கு எதிரெதிரே மன்மதன், ரதிதேவியின் சிற்பங்கள் காணப்படுகின்றன. ரதி, மன்மதனை இதுவரை யாரும் கண்டதில்லை. அவர்களிருவரும் இப்படித்தான் இருப்பார்கள் என தத்ரூபமாய் அமைந்திருக்கும் இந்த சிற்பங்களின் அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது! அவ்வளவு நேர்த்தியுடன் கலைக் களஞ்சியமாய் வடிக்கப்பட்டுள்ளது!
மன்மதன் சிற்பத்தில், அவர் கையில் பிடித்திருக்கும் கரும்பு வில், உண்மையான கரும்பா அல்லது கல்லால் ஆன கரும்பா என இனம் பிரிக்க முடியாத அளவுக்கு வளைக்கப்பட்டுள்ளது படு நேர்த்தி! வில்லைப் பிடித்திருக்கும் விரல்களின் தோற்றமும் கைகளின் வளைவும் அந்த கை, கால்களில் தெரியும் நரம்புகளும் சிற்பிகளின் சீரிய திறமைக்கு கட்டியம் கூறுகின்றன.

ரதிதேவியின் சிற்பத்தில் தெரியும் வடிவழகும் அந்த வதனத்தில் தெரிகின்ற பெண்மைக்கே உரிய நாணமும் சற்றே இடையது நெளிந்து, பெண்மையின் அருமையை பெருமிதத்தோடு உணர்த்தும் நளினமும் காண கண்கோடி வேண்டும்.

திருமணமாகாத ஆண்கள் இந்த ரதியின் சிலைக்கு மாலை சூட்டி, அதனை தாங்கள் கொண்டு போய்

பூஜை செய்ய, அவர்களுக்கு முப்பது நாட்களுக்குள் திருமணம் கைகூடும் அதிசயம் இங்கே அரங்கேறுகிறது. அதேபோல, இங்குள்ள மன்மதன் சிலைக்கு இளம் பெண்கள் மாலையணிவித்து அதனைக் கொண்டு போய் பூஜை செய்ய, முப்பது நாளில் நல்ல மணமகன் அமையும் வாய்ப்பு இயல்பாகவே நடக்கிறது.



இவை ரதி, மன்மதன் சிலைகளின் கைங்கர்யமா? சிற்பிகளின் கைவண்ணமா? என்னும் வியப்பைத் தருகிறது. இன்னுமொரு சிற்பமும் இங்கே ஆன்மீக அற்புதத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அது, கார்த்த வீரிய அர்ஜுனரின் சிற்பம்!
பங்குதாரர்கள் ஏமாற்றி விட்டாலோ அல்லது சொத்தில் நமக்கு சேர வேண்டிய பங்கு கிடைக்காவிட்டாலோ, ஒரு நிறுவனத்தில் நெடுங்காலம் பணியாற்றி, நமக்கு சேர வேண்டிய ஆதாயங்கள் கிடைக்காமல் போனாலோ இப்படி நமக்கு நியாயமாக சேர வேண்டிய பணம் மற்றும் சொத்து பிரச்சினைகளுக்கு இந்த கார்த்த வீரிய அர்ஜுனரை மனமார வேண்டிக் கொண்டு தீபமேற்றி வழிபட்டால் நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சொத்து, தானே கைக்கு வந்து சேருகின்ற அதிசயம் நாள் தோறும் அரங்கேறி வருகிறது.

அடுத்து, சிற்பக் கலைக்கே பெருமைகளை சேர்ப்பதைப் போல்- சிகரம் வைத்தாற் போல் இங்கே கம்பீரமாய் வீற்றிருக்கிறது, தில்லைக் காளியின் சீர் மிகுந்த சிற்பம்!
இந்த தெய்வாம்சம் பொருந்திய சிற்பத்தில் கலை நுணுக்கத்தை கைவிரல் வழியே புகுத்தி, கற்பனைக்கெட்டாத அற்புதத்தை உளிகளால் வடித்துள்ள சிற்பிகளின் சிந்தனைத் திறத்தை வெளிப்படுத்துகிறது, இந்த தில்லைக் காளியின் சிற்பம்.

தில்லையம் பதியில் சிவபெருமானுடன் போட்டியிட்டு நடனமாடும் போது வென்றுவிடப் போகிறோம் என்னும் பெருமிதம், காளியின் முகத்தில் தெரிகிறது. இது ஒரு புறம் இருந்து பார்க்கும் போது நமக்கு கிடைக்கும் காட்சி!
இதே மறுபுறம் நின்று பார்க்கும் போது சிவனிடம் தோற்றதினால் காளியின் முகத்தில் ஏற்பட்ட வருத்தம் மேலோங்க, கண்கள் பணித்து, சங்கடத்தில், கவலையுடன் இருப்பது போன்ற காட்சி நமக்குத் தெரிகிறது.

இங்கு தான் சிற்பியின் ஒப்பற்ற திறமை வெளிப்பட்டுள்ளது தில்லைக் காளியின் ஒரே சிலை! ஒரு புறம் நின்று பார்த்தால் பெருமிதமான- கம்பீர காட்சி!
மறுபுறம் நின்று பார்த்தால் வாட்டம் தோய்ந்த- கவலை சூழ்ந்த காட்சி!

பொதுவாக எதிரில் நின்று பார்த்தால் காளிதேவியின் கண் கவர் தோற்றம்!
இப்படி ஒரு சிற்பம் உருவானது, கடவுளின் கருணையா? சிற்பியின் திறமையா? என்ற பெருவியப்பை உண்டாக்குகின்றது.
இவை தவிர, இந்த ஆலயத்தின் இன்னொரு சிறப்பம்சம், இங்குள்ள ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் சன்னதி
அஷ்டமி தினத்தன்று இந்த ஆலயமே விழாக்கோலம் பூண்டு விட்டதோ என வியக்கும் வண்ணம் சுமார் ஒரு லட்சத்தை நெருங்குகின்ற அளவுக்கு பக்தர்கள் வந்து காத்திருந்து, இந்த பைரவரை வணங்கிச் செல்கின்றனர்.

இந்த ஸ்வர்ண ஆகர்ஷண பைரவரை வணங்குவதால் செல்வம் சேரும் நம்மிடமிருந்து பிறரால் கவரப்பட்ட செல்வங்கள் மீண்டும் வந்து சேரும் என்ற நம்பிக்கை இங்கே அரசோச்சுகின்றது.
தாடிக் கொம்பு என்னும் தலத்தில் அமைந்துள்ள சௌந்தர ராஜ பெருமாள் ஆலயம் சென்று அற்புதங்களைப் பெறலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்






# சகல ஐஸ்வர்ய அபிவிருத்திக்கு அஷ்டலக்ஷ்மி எந்திரம்

நமக்கு தனம், சொத்து மற்றும் பொன் போன்ற அனைத்து விதமான செல்வ வளங்களை அள்ளித்தருபது திருமகள் என்று அழைக்கப்படும் லக்ஷ்மி அன்னை என்றால் மிகையாகாது. இத்தகைய அருமை பொருந்திய லக்ஷ்மி அன்னையின் எட்டு வெவ்வேறு விதமான அம்சங்கள் நிறைந்த லக்ஷ்மிதேவியின் பரிமானங்களே உடையதே அஷ்டலக்ஷ்மியின் அம்சம் ஆகும். எட்டு விதமான லக்ஷ்மி அன்னையின் பெயர்களும் அவர்களை வழிபடுவதால் நமக்கு கிடைக்கும் நன்மைகளை பற்றி பார்ப்போம்.

1. ஆதிலட்சுமி:

ஆதிலஷ்மி அன்னை, திருமகளின் மிகப்பழைமையான தோற்றம். இந்த லட்சுமியை ரமா லட்சுமி என்றும் அழைக்கின்றார்கள். ஆதிலக்ஷ்மியை வழிபடுவதால் தனம், தானியம், பொன், பொருள் போன்ற சகல ஐஸ்வர்யங்களையும் நமக்கு கிடைக்க அருள்புரிவாள்.

2. தனலட்சுமி:

பெயருக்கு தகுந்தார் போல் பொன், பொருள் மற்றும் பணம் என்பவற்றையும் வாரி வழங்கக்கூடிய அன்னை தனலக்ஷ்மி ஆவாள்.

3. தானியலட்சுமி:

தானியலட்சுமியை வணங்குவதால் வேளாண்மை வளம் பெருக்கும், விவசாயம் செழுமை அடைந்து நெற்கதிர், கரும்பு, வாழை போன்ற பயிர்களை தழைத்தோங்க செய்பவள். அது மட்டும் அல்லாது வீட்டில் உணவு தானியங்களுக்கு குறைவு இருக்காது.

4. கஜலட்சுமி:

பார்க்கடலிலிருந்து உதித்தவள் கஜலட்சுமி ஆவாள். பசு, யானை, குதிரை போன்ற கால்நடைகளை பாதுகாத்து அவைகளுக்கு நல்ல ஆரோக்கியத்தை கொடுத்து கால்நடைகள் மூலம் வளம் அருள்பவள்.

5. சந்தானலட்சுமி:

அறிவு, அழகு மற்றும் ஆரோக்கியம் நிறைந்த குழந்தைகளை கொடுப்பவள் இந்த சந்தான லக்ஷ்மி ஆவாள். புத்திரபாக்கியம் இல்லாத தம்பதியருக்கு குழந்தைப்பேறு அருளும் திருமகள் இந்த சந்தானலக்ஷ்மி ஆவாள்.

6. வீரலக்ஷ்மி:

நம் மனதிற்கு தைரியம், வீரம் மற்றும் மன வளிமையை கொடுத்து நாம் துன்பப்படும் நேரத்தில் நம் மனதில் தெம்பை கொடுத்து வாழ்க்கையை தைரியமாக எதிர்கொள்ள செய்பவள் இந்த வீரலக்ஷ்மி அன்னை ஆவாள்.

7. விஜயலட்சுமி:

நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றியை அருள்பவள் இந்த விஜயலட்சுமி அன்னை ஆவாள். நாம் நினைத்த காரியங்கள் எல்லாம் வெற்றி பெற அருள்வாள்.

8. வித்யாலட்சுமி:

நமது கல்வி அறிவை மெருகூட்டி படிப்பில் வெற்றி பெற செய்பவள் இந்த வித்தியாலட்சுமியாவாள். கல்வி மட்டும் அல்லாது பாட்டு, நடனம், ஓவியம் போன்ற 64 கலைகளிலும் திறம்பட கற்று தேர்ச்சி அடைந்து வெற்றி பெற செய்யும் வலிமை வித்யாலக்ஷ்மி அன்னைக்கு உண்டு.

இத்தகைய அருமைகள் நிறைந்த எட்டு தெய்வங்களின் அருளையும் ஒருங்கே பெற்ற ஒரே எந்திரமான அஷ்டலக்ஷ்மி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் தாமரை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் அஷ்டலஷ்மியின் அருளை பெற்று, மேலே குய்ப்பிட்டுள்ள அனைத்து விசையங்களையும் எளிதில் நிறைவேற்றி கொள்வதுடன் சகல ஐஸ்வர்ய அபிவிருத்தியையும் இந்த எந்திரம் ஏற்படுத்தி தரவல்லது.

அஷ்டலஷ்மி மந்திரம்:

"ஓம் ஸ்ரீம் மஹாலக்ஷ்மி நமஹ
அஷ்ட ஐஸ்வர்யம் சம்ரிதிம் மெய் தேகி தபய ஸ்வாஹ ஸ்ரீம் மஹாலக்ஷ்மி நமஹ"




~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மே 1 – 15 ராசி பலன்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



## மேஷம்

- உத்தியோகத்தில் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- சுய தொழில் செய்பவர்கள் ஒரே தொழிலில் முதலீடு செய்வது கூடாது. பிரித்து முதலீடு செய்வதன் மூலம் உங்கள் தொழில் விரிவதற்கான வாய்ப்பு உள்ளது.
- வெளிநாட்டு தொடர்பான தொழில் நடத்துபவர்களும் சிறந்த ஆதாயம் காண்பார்கள்.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகாரிக்கும். தாம்பத்திய உறவில் நல்லிணக்கம் கூடும்.
- வீட்டு பெரியவர்களிடம் கருத்து மோதல்கள் வரலாம். வாக்கில் கவனம் தேவை.
- தாயாருக்கு உடல் நல குறைவு ஏற்படலாம். கவனம் தேவை.
- மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் பளிச்சிடுவார்கள். சிலருக்கு கல்வி உதவிப் பணம் கிடைக்கும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவார்கள். இந்த மாதம் மாணவர்களுக்கு நம்பிக்கை தரும் மாதமாக இருக்கும்.
- உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வரலாம். ஆரோக்கிய உணவு உண்பதின் மூலமாக வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம்.



# ரிஷபம்

- உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். அதனால் வருமானம் உயரும். பணியிடத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் கூடும்.
- வேலை செய்யும் அலுவலகத்தில் உயர்அதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் எழ வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.
- அரசு உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிறப்பாக பணியாற்றுவார்கள்.
- வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு  இந்த மாதம் சாதகமாக இருக்கும்.
- தகவல் தொடர்புத் துறையில் வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் வேலை கிட்டும்.
- சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழிலிலில் நல்ல லாபம் கிடைக்கும்.
- திருமண உறவில் இருப்பவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் உண்டாக வாய்ப்புகள் உள்ளன.
- உங்கள் துணையுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நன்மை பயக்கும்.
- குடும்ப உறுப்பினர்களுடன் சிறு சிறு பிரச்சினைகள் தோன்றினாலும் அது பெரிய அளவில் பாதிப்பை அளிக்காது.
- இந்த மாதம் உங்கள் நிதிநிலை மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். வீடு மராமத்து பணிக்காக செலவுகளை மேற்கொள்வீர்கள்.
- மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பெரிய அளவிலான உடல் நல பாதிப்புகள் ஏதும் இருக்காது.



# மிதுனம்

- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை சாதகமான நிலை காணப்படும். உங்களில் சிலர் வேலை மாற்றங்களை விரும்புவீர்கள்.
- திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்களுக்கான விரயங்கள் ஏற்படலாம்.
- பயணத்திற்காகவும் நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரும்.
- திருமணமான தம்பதிகளுக்கு தாம்பத்தில் நல்லிணக்கம் கூடும்.
- அதிக பணிகள் காரணமாக உங்களால் குடும்பத்திற்கென அதிக நேரத்தை ஒதுக்க இயலாது.
- வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் நீங்கள் சில காலம் உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும்.
- மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் வெற்றி கிடைக்கும்.
- உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பாராட்டுதலை பெறுவார்கள்.
- மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மற்றபடி பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்படாது.



# கடகம்

- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வார்கள். உங்கள் பணியிடத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வீர்கள். அதில் சிறந்து விளங்குவீர்கள்.
- வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.
- இந்த மாதம் நீங்கள் குடும்பத் தொழிலை விரிவு படுத்த பணத்தை முதலீடு செய்வீர்கள்.
- இந்த மாதம் புதிய ஆடைகள் மற்றும் வாகனங்கள் வாங்குவீர்கள்.
- இந்த மாதம் அதிக ஆடம்பர செலவுகளைச் செய்யாமல் செலவை கட்டுபடுத்துங்கள். பட்ஜெட் அமைத்து செலவுகளை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.
- இந்த மாதம் உங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்க வாய்ப்புகள் உண்டு.
- கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் வந்து போகும். பேச்சில் கவனம் தேவை.
- குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் அன்பும் அரவணைப்பும் இருக்கும்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் இந்த மாதம் சிறப்பாக கல்வி பயில்வார்கள்.
- மாசு காரணமாக ஒவ்வாமை அல்லது ஆஸ்துமா போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல்நலனில் அக்கறை தேவை.



# சிம்மம்

- உத்தியோகத்தில் இருப்பவர்கள் வெளியிடங்களுக்கு சென்று வேலை பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது.
- உத்தியோகம் சம்மந்தமாக அலைச்சல் அதிகரிக்கும்.
- புதிய தொழிலுக்காக அதிக முதலீடுகளை செய்வீர்கள்.
- பழைய தொழிலை விரிவாக்கம் செய்வதற்கு ஏற்ற மாதம் ஆகும்.
- கூட்டுத் தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.
- கணவன் மனைவிக்கு இடையே இணக்கம் கூடும்.
- குடும்பச் சூழல் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். பணம் சம்மந்தப்பட்ட விஷயங்கள் குறித்து இதுவரை குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் யாவும் சீராகும்.
- புதிய வீடு மாறுவதற்கு இந்த மாதம் சிறந்த மாதமாகும்.
- பழைய சொத்துக்கள் அல்லது பழைய வண்டி வாகனகங்கள் வாங்கும் வாய்ப்பு உள்ளது.
- மாணவர்கள் படிப்பில் கவனம் சிதறும் வாய்ப்புகள் உள்ளது. பொறுப்புடன் படிப்பது நலம்.
- உயர்கல்வி மாணவர்களுக்கு தேர்வில் வெற்றி பெறுவர்.
- வெளிநாட்டில் உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.
- அஜீரண கோளாறுகள் வர வாய்ப்புள்ளது. துரித மற்றும் வெளியிட உணவுகளை தவிப்பது நன்மை பயக்கும்.



# கன்னி

- திருமணமான  தம்பதிகளுக்கு இடையே நல்லுறவு நீடிக்கும்.
- நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- கலை மற்றும் இசையின் மீது ஆர்வம் கூடும்.
- தங்களின் வேலை மற்றும் நிதிநிலையில் ஏற்றம் காணப்படும்.
- பணியிடத்தில் பதவி உயர்வு கிட்டும். அதன் மூலம் உங்கள் வருமானம் உயரும்.
- சுய தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும்.
- இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும்.
- மாணவ மாணவியர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.
- உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தி படிப்பார்கள். பேராசிரியர்களின் பாராட்டுதலை பெறுவார்கள்.
- இந்த மாத பிற்பகுதியில் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் இல்லாவிட்டாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும்.
- தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.



# துலாம்

- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் மனதில் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.
- தங்களின் உத்தியோகம் நிமித்தமாக வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.
- வேலையில் உள்ள தங்களின் எதிர் கால திட்டம் குறித்து உங்கள் மேலதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.
- தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.
- உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும்.
- இந்த மாதம் வெற்றி வாய்ப்பு உங்களை நாடி வரும். உங்கள் பெயர் புகழ் பெருகும்.
- அரசுத் துறை சார்ந்து தொழில் செய்பவர்கள் இந்த மாதம் சிறந்த முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள்மற்றும் மேலதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும் என்றாலும் மனதில் சிறிது பதட்ட நிலை இருக்கும்.



# விருச்சிகம்

- தம்பதிகளுக்கிடையே இணக்கம் கூடும்.
- குடும்பப் பொறுப்புகளை மேற்கொள்வதன் மூலமும் குடும்ப உறவுகளின் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமும் குடும்ப உறவு சிறக்கும்.
- பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- பணி நிமித்தமான பயணம் உங்களுக்கு நன்மைதரும் வகையில் இருக்கும். வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்கவும்.
- பணியிடத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும்.
- பெரிய தொழில் அதிபர்கள் உங்களுடன் தொழில் செய்ய விரும்புவார்கள்.
- மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள்.
- உயர்கல்வி படிப்பவர்களுக்கு சில தடைகள் இருந்தாலும் இந்த மாத கடைசி பகுதியில் படிப்பில் ஏற்றம் காண்பார்கள்.
- வேலை பளு காரணமாக மனதில் பதட்டமான நிலை இருக்கும். அது உங்கள் உடல் நிலையை பாதிக்கும் என்பதால் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.



# தனுசு

- கணவன் மனைவி உறவில் அன்யோன்யம் கூடும்.
- உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. கவனம் தேவை.
- இந்த மாதம் நிலம் அல்லது சொத்து வாங்கும் யோகம் உண்டு. கடன் வேண்டி விண்ணப்பித்திருந்தால் அது கிட்டும்.
- குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள், விருந்து மற்றும் விசேஷங்கள் நடப்பதற்கான வாய்ப்புகள் உண்டு.
- இந்த மாதம் உத்தியோகத்தில் நீங்கள் சில தவறுகளைப் புரிவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள், சுமுகமான முறையில் தொழில் நடக்கவும் தொழிலில் வெற்றி காணவும் கவனமுடன் செயல்பட வேண்டும்.
- பணப்புழக்கம் தாராளமாக இருக்கும்.
- தகவல் தொடர்பு மூலம் நீங்கள் வெளிநாடு மற்றும் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மூலம் வருமானம் பெறுவீர்கள்.
- மாணவ மாணவியர்கள் அதிக கவனத்துடன் அதிக நேரம் படிக்க நேரும் என்பதால் மாணவர்களின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# மகரம்

- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- குடும்பத்தில் உள்ளவர்களிடம் கருத்து வேறுபாடுகள் காரணமாக வாக்குவாதங்கள் எழும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை பயக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் சில பின்னடைவுகளும் சவால்களும் காணப்படும். இந்த மாதத்தின் கடைசி  பகுதியில் உத்தியோகம் சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் தீரும்.
- புதிய தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்கள் பெயரும் புகழும் ஓங்கும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள் நன்மை தீமை கலந்த பலன்களைப் பெறுவார்கள்.
- மாணவர்கள் கல்வியில் ஏற்றம் காண்பார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும். என்றாலும் மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக இனம் புரியாத உடல் உபாதைகள் ஏற்படும்.
- யோகா மற்றும் தியானம் மற்றும் இறை வழிபாடு மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் சீராக தக்க வைத்துக் கொள்ளமுடியும்.



# கும்பம்

- இந்த மாதம் குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.
- குழந்தைகளுடனான உறவு வலுப்படும். குடும்பத்தில் அமைதி நிலவும்.
- நல்ல மனிதர்களின் நட்பு மூலம் உத்தியோகத்தில் ஆதாயங்களைப் பெறுவீர்கள்.
- பணி செய்யும் இடத்தில் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் வந்து போகும். எனவே நீங்கள் கவனமுடன் செயல்பட வேண்டும்.
- புதிய தொழிலை மேற்கொள்வதற்கு இது ஏற்ற மாதம். பயணங்கள் மூலம் புதிய தொழில் வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.
- கூட்டுத் தொழில் மூலம் நீங்கள் ஒரு புதிய திருப்புமுனையைக் காண்பீர்கள். புதிய கூட்டாளிகளைக் கண்டு கொள்வீர்கள்.
- இந்த மாதம் உங்கள் பொருளாதாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் மனதில் துடிப்பும் உற்சாகமும் காணப்படும். அதிக பணிகள் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.
- சளி மற்றும் காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



# மீனம்

- கணவன் மனைவி இருவரும் பரஸ்பரம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் திருமண உறவில் நல்லிணக்கம் ஏற்படும்..
- தாய் மற்றும் தந்தையின் உடல்நலனில் அக்கறை தேவை.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் உங்கள் படைப்பாற்றல் வெளிப்படும். உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படும்.
- வேலை நிமித்தமாக வெளி நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.
- சுயதொழிலில் இந்தமாதம் அதிக லாபங்கள் கிட்டாது.
- வெளிநாடு தொடர்புடைய  தொழில் செய்பவர்கள் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- கூட்டுத் தொழிலில் வெற்றி காண  இயலும்.
- இந்த மாதம் ஆடம்பர செலவுகளை தவிர்த்து அத்தியாவச செலவுகளை மேற்கொள்வது நன்மை பயக்கும்.
- மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆலோசனைகளைக் கேட்பதன் மூலம் சிறந்த பலன்களைப் பெறுவார்கள்.
- உயர்  கல்வி படித்து முடிக்கும் நிலையில் இருக்கும் மாணவர்கள் வேலை கிடைக்கப் பெறுவீர்கள்.
- உங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. வயிறு மற்றும்  தலை சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படும். என்றாலும் மருத்துவ சிகிச்சை  மேற்கொள்ளும் அளவிற்கு பெரியதாக இருக்காது.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **88702 88701**